### உலக கழிப்பறை தினத்தினை முன்னிட்டு சுகாதாரம் குறித்த

# விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் சிறப்பு அஞ்சல் தலை!

## மேயர் திருமதி ஆர். பிரியா வெளியிட்டார்!



சென்னை,நவ.20-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி பெருநகர சென்னை மாநகராட்சியில் சுகாதாரத் திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்நிலையில் ஆண்டுதோறும் நவம்பர் 19ஆம் தேதி உலக கழிப்பறை தினமாக அனுசரிக்கப்படுவதை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதி மக்களிடையே சுத்தம் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்திடும் வகையில் சிறப்பு அஞ்சல் தலையினை மேயர் திருமதி ஆர். பிரியா நேற்று (19.11.2025) வெளியிட்டார். 5 ரூபாய்க்கான இந்த அஞ்சல் தலையில் ஆண், பெண், மாற்றுத்திறனாளி, மூன்றாம் பாலினத்தவர் படங்களுடன் *Clean Sanitation For All - World Toilet Day 2025* (அனைவருக்குமான சுத்தம் சுகாதாரம் - உலக கழிவறை தினம் 2025) என்கிற வாசகங்களுடன் அமைந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து கழிவறை வளாகத்தில் கட்டணமில்லா பகுதி என்பதை குறிக்கும் வகையில் No Fee Zone என்கிற வாசகத்துடன் கூடிய விளம்பரப் பலகை, சுகாதாரப் பணியாளர்கள் அணிந்து கொள்ளும் பேட்ஜ் மற்றும் ஸ்டிக்கர்களை மேயர் வெளியிட்டு வழங்கினார்.

மேலும், சுகாதாரப் பணியாளர்களுக்கு சீருடை, கையுறை, முகக்கவசம், தண்ணீர் குடுவை (*Stainless Steel Water Bottle*) அடங்கிய பாதுகாப்பு உபகரண தொகுப்புகளை வழங்கினார். முன்னதாக, மேயர் அவர்களின் தலைமையில் உலக கழிப்பறை தின உறுதி மொழியினை அலுவலர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்கள் ஏற்றுக் கொண்டனர்.

இந்நிகழ்வில் துணை மேயர் மு.மகேஷ்குமார், மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், நிலைக் குழுத் தலைவர் (பொது சுகாதாரம்) டாக்டர் கோ. சாந்தகுமாரி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



காஞ்சிபுரம் மாவட்டம் – உத்திரமேரூர் அரசு ஆண்கள், பெண்கள் மேல்நிலைப் பள்ளி, கம்மாளம்பூண்டி,மானாம்பதி,பெருநகர், களியாம்பூண்டி உள்ளிட்ட 6 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் 11ஆம் வகுப்பு பயிலும் 8 64 மாணவ மாணவிகளுக்கு விலை யில்லா மிதிவண்டிகளை மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. வழங்கி சிறப்புரையாற்றினார். இதனைத் தொடர்ந்து 10மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் முதல் மூன்று இடம் பிடித்த மாணவ மாணவிகளுக்கு சால்வை அணிவித்து ஊக்கத் தொகையும் வழங்கி சிறப்பித்தார். இந்நிகழ்வில் ஒன்றிய செயலாளர் கெ.ஞானசேகரன், பாரிவள்ளல், சசிகுமார்,சுப்புராயன்,ரூத்ரகோட்டி,சுகுனா சுந்தர்ராஜன்,ராதா நடேசன்,கோவிந்தராஜ்,மங்களகௌரி வடிவேலு,சுதாகர், அண்ணாதுரை,கோபி,ஆதி, பாலாஜி,வெங்கடேசன்,அறிவழகன்,உள்ளாட்சி பிரதிநிதிகள், திமுக நிர்வாகிகள், பள்ளி தலைமை ஆசிரியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### தாய், தந்தையை இழந்த 4 குழந்தைகளின் எதிர்காலத்தை உறுதிப்படுத்திய

# முதல்வர் மு.க.ஸ்டாலின் தமிழ்நாட்டின் தாயாக உயர்ந்து நிற்கிறார்!

## விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் பாராட்டு!

சென்னை, நவ. 20 -

“தாய், தந்தையை இழந்த நான்கு குழந்தைகளின் எதிர்காலத்தை உறுதிப்படுத்திய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டின் தாயாக உயர்ந்து நிற்கிறார்” என்றுவிவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரத்தை அடுத்த பூட்டை கிராமத்தைச் சேர்ந்த கமலக்கண்ணன் என்ற கூலித் தொழிலாளிக்கு லாவண்யா உட்பட நான்கு குழந்தைகள் உள்ள நிலையில் ஏற்கனவே தாய் மறைந்து உள்ளார். இந்த நிலையில் அவர்களுக்கு இருந்த ஒரே பாதுகாப்பு தந்தையான கமலக்கண்ணன் அவர்களும் கடந்த 14ஆம் தேதி மறைந்துள்ளார். தாயையும், தந்தையும் இழந்து அனாதையாக நின்ற நான்கு குழந்தைகளுக்காக ஆதரவாக அந்த கிராமத்து மக்கள் ஒன்று சேர்ந்து மறைந்த கமலக்கண்ணனின் இறுதி சடங்கை செய்து முடித்துள்ளனர். நிலைமையை அறிந்து ஆதரவற்று, அச்சத்தோடு நின்ற நான்கு குழந்தைகளின் எதிர்காலத்தை உறுதிப்படுத்திய தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டு மக்களை காக்கிற தாயாக உயர்ந்து நிற்கிறார்.

தாய், தந்தை, உற்றார், உறவினர் ஆதரவின்றி அம்போ என்று நின்ற அந்த குழந்தைகளின் நிலை குறித்து நாளேட்டில் வந்த செய்தியை அறிந்த உடன் உடனடியாக மாவட்ட ஆட்சியருக்கு அறிவுறுத்தி அந்த குழந்தைகளை நேரில் சென்று சந்தித்து தேவையான அனைத்தையும் செய்து தரும்படி உத்தரவிட்ட முதலமைச்சர், தானே தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசி உள்ளார். மூத்த மகளான லாவண்யாவிடம் முதலமைச்சர் பேசி ஆறுதல் கூறியதோடு அரசு வேலை வழங்கப்படும் என்றும் அவர்களுக்கு ஒரு வீடு ஏற்பாடு செய்து தரப்படும் என்றும் உறுதியளித்துள்ளார். மற்ற குழந்தைகளின் கல்விக்கு ஏற்பாடு செய்யப் படும் என்கிற உறுதியையும் அளித்துள்ளார். அதனை தொடர்ந்து அந்த மாவட்டப் பொறுப்பு அமைச்சரும், பொதுப்பணித்துறை அமைச்சருமான ஏ.வ.வேலு அவர்கள் அந்த குழந்தைகளை நேரில் சந்தித்து ஆறுதல் கூறியிருப்பது அவர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தி இருக்கிறது. இது அந்த குழந்தைகளின் எதிர்காலத்தை உறுதி செய்துள்ளது.



ஒரு நாளேட்டில் வந்த செய்தி அறிந்து ஆதரவற்று, அச்சத்தோடு நின்ற நான்கு குழந்தைகளின் எதிர்காலத்தை உறுதிப்படுத்திய தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டு மக்களை காக்கிற தாயாக உயர்ந்து நிற்கிறார்.

பெற்றப் பிள்ளைகளின் அரவணைப்பின்றி, மன உளைச்சலுக்கு ஆளாகி இருக்கிற முதியோர்களின் நிலைமைகளை உணர்ந்து அவர்களின் மன நிலையை மடைமாற்றம் செய்திட அவர்கள் இறுதி காலத்தில் மகிழ்ச்சியாக இருந்திட அன்புசோலை திட்டத்தை அண்மையில் 10.11.2025 அன்று திருச்சியில் தொடங்கி வைத்து முதியோர்களுக்கு ஒரு ஊன்றுகோலாக நம்முடைய முதலமைச்சர் விளங்கி வருகிறார். ஒவ்வொரு பெற்றோர்களின் இறுதி காலம் என்பது ஒரு கொடூரமான காலமாக மாறி வருகிறது. இப்படிப்பட்ட நிலையில் அவர்களுக்கான ஒரு திட்டத்தை அறிவித்திருப்பது முதலமைச்சரின் தாய் உள்ளத்தை காட்டுகிறது.

துப்புரவுப் பணியாளர்களுக்கு வீடு வழங்கும் திட்டம், மூன்று வேளையும் வயிறார உணவு வழங்கும் திட்டத்தை அறிவித்திருப்பது போன்றவை எல்லாம் தாய் உள்ளத்தின் வெளிப்பாடாகும்.

இப்படி தமிழ்நாட்டில் பாதிக்கப்படுகிறவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும், எங்கே இருந்தாலும் அவர்களுக்கு தாயாக நான் இருக்கிறேன் என்று ஆறுதல் அளிப்பவர் தான் தமிழ்நாட்டுடைய முதலமைச்சர். அவருடைய பணிகள் தொடர விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி வாழ்த்துகிறது.

இவ்வாறு பொன்.குமார் அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

### எழும்பூர் தொகுதி, வார்டு எண்,58: தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ்

# ரூ.36.40 இலட்சம் மதிப்பில் பல்நோக்குக் கூடம் கட்டும் பணி!

## இ.பரந்தாமன், எம்.எல்.ஏ., அடிக்கல் நாட்டினார்!



சென்னை,நவ.20-

கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் வார்டு எண்.58, பெரியமேடு, நேவல் ஹாஸ்பிடல் இரண்டாவது தெருவில் 36.40 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் பல்நோக்குக் கூடம் கட்டும் திட்டப் பணிக்கு அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5இன் செயற்பொறியாளர் பழனி, உதவி செயற்பொறியாளர் கண்ணன், 61வது வார்டு உதவிப் பொறியாளர் சஞ்சீவராவ் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

அவைத் தலைவர் வெ.மருதன், எழும்பூர் தெற்குப் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் எல். சுகுமாறன், 58வது வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ரோஹித் குமார், ஆஸ்டின்; சரவணன், ஜெய்சங்கர், ராஜேந்திரன், என்.விஜயகுமார், ரோஷன், அனிஷ், சாலமன், ஜெ.எஸ். பிரபாகரன், ஜெ.எஸ்.திலீபன், ஏ.அப்துல்லா, ஞா. கென்னடி, வீ.கமல், எஸ்.கண்ணன், ஜெ.விநாயகம், ஆர். முரளி, கே.லோகேஷ், எஸ். சரிதா உள்ளிட்ட கழக நிர்வாகிகளும் செயல்வீரர்களும் கலந்துகொண்டனர்.

### எஸ்.ஐ.ஆர்.–ஐ அமல்படுத்துவதில் மோடி அரசுடன் சேர்ந்து

# தேர்தல் ஆணையம் காட்டும் தீவிரம் சந்தேகப்பட வைத்துள்ளது!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் கண்டனம்!

சென்னை, நவ. 20 -

தினகரன் நாளேட்டின் நேற்றைய தலையங்கம் வருமாறு:-



தினகரன்

நவம்பர் 19, 2025 புதன்கிழமை

எஸ்ஜஆர் எதிர்ப்பு

பீகாரை தொடர்ந்து தமிழ்நாட்டிலும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. இறுதியாக தமிழ்நாட்டில் 2002ம் ஆண்டில் 197 தொகுதிகளிலும், 2005ம் ஆண்டு 37 தொகுதிகளிலும் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் நடந்தன. தற்போது 20 ஆண்டு கழித்து மேற்கொள்ளப்படும் இந்த பணிகளுக்கு தமிழ்நாடு முழுவதும் கடும் எதிர்ப்பு எழுந்துள்ளது.

தமிழ்நாட்டில் கடைசியாக 2025ம் ஆண்டு ஜனவரி 1ம் தேதி வெளியிடப்பட்ட வாக்காளர் பட்டியலின்படி சுமார் 6.36 கோடி வாக்காளர்கள் உள்ளனர். தமிழ்நாடு முழுவதும் 68,000க்கும் அதிகமான வாக்குச்சாவடிகள் உள்ளன. ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் ஒரு வாக்குச்சாவடி அலுவலர் உள்ளார். அவர் தரப்பில் வீடுவீடாக சென்று எஸ்ஜஆர் விண்ணப்பங்கள் வழங்கப்பட்டு வருகிறது. இந்த படிவத்தை டிசம்பர் 4ம் தேதிக்குள் பூர்த்தி செய்து சமர்ப்பிக்க வேண்டும்.

தற்போது எஸ்.ஐ.ஆர் பணிகளில் வாக்காளர்கள் இரண்டு வகையாகப் பிரிக்கப்படுகின்றனர். ஒன்று 2002-05 எஸ்ஜஆருக்குப் பிந்தைய வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றவர்கள், இரண்டா

பீகாரை தொடர்ந்து தமிழ்நாட்டிலும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. இறுதியாக தமிழ்நாட்டில் 2002ம் ஆண்டில் 197 தொகுதிகளிலும், 2005ம் ஆண்டு 37 தொகுதிகளிலும் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் நடந்தன. தற்போது 20 ஆண்டு கழித்து மேற்கொள்ளப்படும் இந்த பணிகளுக்கு தமிழ்நாடு முழுவதும் கடும் எதிர்ப்பு எழுந்துள்ளது.

தமிழ்நாட்டில் கடைசியாக 2025ம் ஆண்டு ஜனவரி 1ம் தேதி வெளியிடப்பட்ட வாக்காளர் பட்டியலின்படி சுமார் 6.36 கோடி வாக்காளர்கள் உள்ளனர். தமிழ்நாடு முழுவதும் 68,000க்கும் அதிகமான வாக்குச்சாவடிகள் உள்ளன. ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் ஒரு வாக்குச்சாவடி அலுவலர் உள்ளார். அவர் தரப்பில் வீடுவீடாக சென்று எஸ்ஜஆர் விண்ணப்பங்கள் வழங்கப்பட்டு வருகிறது. இந்த படிவத்தை டிசம்பர் 4ம் தேதிக்குள் பூர்த்தி செய்து சமர்ப்பிக்க வேண்டும்.

தற்போது எஸ்.ஐ.ஆர் பணிகளில் வாக்காளர்கள் இரண்டு வகையாகப் பிரிக்கப்படுகின்றனர். ஒன்று 200205 எஸ்ஜஆருக்குப் பிந்தைய வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றவர்கள், இரண்டாவது அதில் இடம்பெறாதவர்கள். கணக்கீட்டுப் படிவத்தில் முதல் கட்டத்தை அனைவருமே நிரப்ப வேண்டும்.

2002-05 எஸ்.ஐ.ஆருக்கு பிந்தைய பட்டியலில் இடம்பெற்றவர்கள் முதல் கட்டத்தை நிரப்பியதோடு இரண்டாவது கட்டத்தில் 2002-05 எஸ்.ஐ.ஆருக்கு பிந்தைய வாக்காளர் பட்டியலில் உள்ள சட்டமன்ற தொகுதி, வாக்காளர் அடையாள அட்டை எண், பாகம் எண் மற்றும் வரிசை எண் உள்ளிட்ட விவரங்களை நிரப்ப வேண்டும்.

2005க்குப் பிறகு இடம்பெயர்ந்தவர்கள், முகவரி மாறியவர்களுக்கு பழைய தகவல்களை எடுப்பதில் சிக்கல் எழுகிறது. எனவே 2002-05 எஸ்ஐஆருக்குப் பிந்தைய வாக்காளர் பட்டியலில் உள்ள தகவல்களை இணையத்தில் தெரிந்து கொள்ளலாம் என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. இதில் வாக்காளர் பெயர், வாக்காளர் அடையாள அட்டை எண் மூலம் விவரங்களைப் பெறலாம் என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. வாக்காளர் அடையாள அட்டை எண் இல்லை யென்றாலும் வாக்காளர் பெயர் மற்றும் வாக்காளர் பட்டியலை வைத்து தெரிந்து கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவை எல்லாம் பெரிய வேலை. சாதாரண, பாமர மக்களுக்கு கடினம். அவர்களுக்கு உதவ, அரசு ஊழியர்கள் களம் இறக்கப்பட்டுள்ளனர். தமிழ்நாடு சட்டப் பேரவை தேர்தலுக்கு முன்னர் இத்தனை வேகமாக ஏன் செய்ய வேண்டும்? சட்டப்பேரவை தேர்தல் முடிந்த பிறகு செய்யலாம் அல்லது மக்கள் தொகை கணக்கெடுப்பின் போது மேற்கொள்ளலாம் என்ற குரல் தேர்தல் ஆணையத்தின் காதுகளுக்கு எட்டவில்லை. இதனால் அதிமுக, பாஜ தவிர ஆளும் திமுக உள்பட அனைத்து கட்சிகளும் எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் நடத்தி உள்ளன.

காங்கிரஸ் கட்சியும் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது. உச்ச நீதிமன்றத்திலும் வழக்கு நிலுவையில் உள்ளது. ஆனால் அதி தீவிரமாக எஸ்ஐஆர் பணிகளை அமல்படுத்தும் வேலையில் தேர்தல் ஆணையம் தீவிரமாக உள்ளது. பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித்ஷா ஆதரவாக உள்ளனர். 2021ம் ஆண்டு கணக்கெடுக்க வேண்டிய மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிகள் தொடங்கப்படவில்லை. அதற்கு மோடி அரசு அவசரம் காட்டவில்லை. 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடக்கும் பணி அது. கொரோனாவை காரணம் காட்டி தள்ளி வைக்கப்பட்டது. 5 வருடங்கள் கடந்து விட்டன. எந்த பதிலும் இல்லை. ஆனால் எஸ்ஜஆர் அமல்படுத்துவதில் மோடி அரசுடன் சேர்ந்து தேர்தல் ஆணையம் காட்டும் தீவிரம் அனைவரையும் சந்தேகப்பட வைத்துள்ளது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கவிஞர் பொன்னிவளவன்

### நவம்பர் 20 (1998)



தி.மு.க. இலக்கிய அணியின் தலைவராக பணியாற்றியவர்.

“கவியரங்குகள் பலவற்றில் பொன்னிவளவன் பாடிய கவிதைகள் எப்போதும் தன்மானத் தமிழர்களின் செவிகளில் ஒலித்துக் கொண்டேயிருக்கும். சாகாத கவிஞர்களின் வரிசையிலே இணைந்துவிட்ட அந்த உடன்பிறப்பை கழகமும், கழகக் கண்மணிகளும் என்றும் மறந்திட இயலாது” என தலைவர் கலைஞரால் புகழந்துரைக்கப்பட்டவர்.

தூத்துக்குடி நீதிமன்றத்தில் சட்ட எரிப்பு வழக்கில் நீதிபதி முன்னர் கவிதை வாக்குமூலம் தந்து கடுங்காவல் தண்டனை பெற்றவர்.

நெருக்கடி காலத்தில் ஓராண்டு சிறைவாசம் இருந்தவர்.

தலைமைக் கழகச் சார்பில் “கலைஞர் விருது” பெற்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

### தமிழ்நாடு மின் உற்பத்தி கழகம்

#### மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு

| ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண் | ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர் | பணியின் விவரம் |
|---|---|---|
| 201 | மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-2 | Supply of spares for PRDS safety valve spares and soot blower valve stem assembly for 600 MW Boiler |
| 203 | மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-2 | Procurement of New Transformer Oil |
| 204 | மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-2 | Procurement of Main Turbine pedestal Oil Guard Ring sealing strips Screw Set Hex Screw Hex Sealing C |
| 206 | மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-2 | Procurement of Main Turbine LP turbine blade clamping piece and locking plate |
| 207 | மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-2 | Supply of pH Analyzer and Conductivity Analyzer along with accessories for SWAS Unit I and II |
| 209 | மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-2 | Supply and Erection of Hotwell SS stand pipes and fittings |
| 252 | மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-1 | Design Manufacturing and Supply of tube and bends for Hot Re-Heater inlet T22 portion suitable |
| 253 | மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-1 | Bowl Extension ring with tapped holes for HP803 Bowl mills |
| 254 | மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-1 | Supply of New Transformer Oil |
| 255 | மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-1 | Distance piece assembly for fuel inlet corner 1 in Unit-II |
| 256 | மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-1 | Distance piece assembly for fuel inlet corner 1 in Unit-III |
| 257 | மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-1 | Skin casing sheet for first pass inter pass and second pass for Unit III Boiler |
| 260 | மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-1 | Clevis Hanger assemblies for Horizonte buck stray for Coal piping system of HP803 Bowl mills |

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளங்களை காணவும்: **www.tntenders.gov.in/nicgep/app, www.tnpdcl.org, www.mstcecommerce.com/eprochome/tneb, www.tenders.tn.gov.in**

செ.ம.தொ.இ/6240/ஒப்பந்தப்புள்ளி/2025

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருச்சி எஸ்.ஏ.ஜி. ராபி

### நவம்பர் 20 (2004)



திருச்சி நகரக் கழகச் செயலாளராக இரண்டு முறை பணியாற்றியவர்.

செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராகவும் இருந்துள்ளார்.

பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரின் நெருங்கிய நண்பர்.

கழகம் நடத்திய அறப்போராட்டங்கள் அனைத்திலும் கலந்து கொண்டவர்.

மிசா கைதியாக ஓராண்டு காலம் சிறையில் இருந்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.